
# சின்னச் சின்ன...




சின்னச் சின்னப் பாப்பா
சிரிக்கும் அழகு பாப்பா
தாத்தா பாடும் பாட்டுக்கு
தாளம் போடும் பாப்பா
நாற்று வயலின் ஓரம்
நடனம் ஆடும் பாப்பா




சின்னச் சின்னத் தக்காளி
சிவப்பு வண்ணத் தக்காளி
குச்சி போன்ற கால்களால்
குதித்துக் குதித்துப் போனதாம்
தட்டு மேலே ஏறிநின்று
குட்டிக் கரணம் போட்டதாம்







Karka Kasadara

# கூட்டலை அறிவேன் -I

## ஆயத்தப்படுத்துதல் – 1

எண்ணும் எழுத்தும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று
ஓணான் வந்து சொல்லிச்சாம் (2)
இரண்டும் ஒன்றும் மூன்று என்று
மூஞ்சூறு வந்து சொல்லிச்சாம் (2)

மூன்றும் ஒன்றும் நான்கு என்று
நாரை வந்து சொல்லிச்சாம் (2)
நான்கும் ஒன்றும் ஐந்து என்று
அயிரமீனு சொல்லிச்சாம் (2)


ஐந்தும் ஒன்றும் ஆறு என்று
ஆந்தை வந்து சொல்லிச்சாம் (2)
ஆறும் ஒன்றும் ஏழு என்று
எறும்பு வந்து சொல்லிச்சாம் (2)

ஏழும் ஒன்றும் எட்டு என்று
எருது வந்து சொல்லிச்சாம் (2)
எட்டும் ஒன்றும் ஒன்பது என்று
ஒட்டகம் வந்து சொல்லிச்சாம் (2)

Karka Kasadara

எண்ணும் எழுத்தும்

# சேர்ந்தே போவோம்!





கடகட கடகட மாட்டுவண்டி – நீ
எந்த ஊர் போகிறாய் மாட்டுவண்டி?
நானும் வருவேன் மாட்டுவண்டி
சேர்ந்தே போவோம் மாட்டுவண்டி!

டக்டக் டக்டக் குதிரைவண்டி – நீ
எந்த ஊர் போகிறாய் குதிரைவண்டி?
நானும் வருவேன் குதிரைவண்டி
சேர்ந்தே போவோம் குதிரைவண்டி!

தடதட தடதட தொடர்வண்டி – நீ
எந்த ஊர் போகிறாய் தொடர்வண்டி?
நானும் வருவேன் தொடர்வண்டி
சேர்ந்தே போவோம் தொடர்வண்டி!



Karka Kasadara

# ஆலமரத்துல விளையாட்டு

எண்ணும் எழுத்தும்



ஆலமரத்துல விளையாட்டு
அணிலே அணிலே கைதட்டு

குக்கூ குக்கூ குயில்பாட்டு
கொஞ்சம் கிளியே தலைபாட்டு

குட்டிக்குரங்கே வாலாட்டு
குள்ள நரியே தாலாட்டு

சின்ன முயலே மேளங்கொட்டு
சிங்கக்குட்டியே தாளந்தட்டு

எல்லோருந்தான் ஆடிக்கிட்டு
ஏலேலேலோ பாடிக்கிட்டு

ஒன்றாகத்தான் சேர்ந்துகிட்டு
ஓடிவாங்க துள்ளிக்கிட்டு

Karka Kasadara

# பாட்டு பாடவா!

எண்ணும் எழுத்தும்






# ஆயத்தப்படுத்துதல்-1

எண்ணும் எழுத்தும்

ஒரு எலி ஓடி வந்து
ஊரெல்லாம் கத்துச்சாம்!
இரண்டு எலி ஓடி வந்து
ரெட்டைக்கொம்பு ஊதுச்சாம்!
மூன்று எலி ஓடி வந்து
மூக்காலி போட்டுச்சாம்!
நான்கு எலி ஓடி வந்து
நாதஸ்வரம் வாசிச்சுச்சாம்!
ஐந்து எலி ஓடி வந்து
மஞ்சள் அரைச்சுச்சாம்!
ஆறு எலி ஓடி வந்து
ஆர்ப்பாட்டம் பண்ணுச்சாம்!
ஏழு எலி ஓடி வந்து
ஏணி மேல ஏறுச்சாம்!
எட்டு எலி ஓடி வந்து
எட்டி எட்டி பார்த்துச்சாம்!
ஒன்பது எலி ஓடி வந்து
ஒய்யாரமா நின்னுச்சாம்!
பத்து எலி ஓடி வந்து
பனியாரம் தின்னுச்சாம்!



எண்ணும்
எழுத்தும்

# மழைப்பாட்டு



பளீச் பளீச் டமடம
பளீச் பளீச் டமடம
மழையே மழையே வா வா
மழையே மழையே வா வா
மல்லிகை நான் காத்திருக்கேன்

பளீச் பளீச் டமடம
பளீச் பளீச் டமடம
மழையே மழையே வா வா
மழையே மழையே வா வா
தென்னை மரம் நான் காத்திருக்கேன்



Karka Kasadara

# கும்மாளமாம் கும்மாளம்

கும்மாளமாம் கும்மாளம்!
கும்மாளமாம் கும்மாளம்!
கொல்லைப்புறத் தோட்டத்திலே
கும்மாளமாம் கும்மாளம்!

காக்கா குயில் குருவியும்
கருப்பு கருப்பு என்றதாம்!
பட்டாணி அவரை வெண்டையும்
பச்சை பச்சை என்றதாம்!

மாதுளை தக்காளி ஆப்பிளும்
சிவப்பு சிவப்பு என்றதாம்!
ஆவாரம் சாமந்தி கொன்றையும்
மஞ்சள் மஞ்சள் என்றதாம்!

கொக்கு புறா அன்னமும்
வெள்ளை வெள்ளை என்றதாம்!
பூவும் பழமும் காய்களும்
வானில் பறக்கும் பறவைகளும்

ஒன்றாய் சேர்ந்து மகிழ்ச்சியாய்
ஒற்றுமையாய் வாழ்ந்ததாம்!
கும்மாளமாம் கும்மாளம்!
கும்மாளமாம் கும்மாளம்!



Karka Kasadara

# எங்கள் வீட்டு தோட்டம்!



எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
காக்கா வந்தது (2)
அதன் நீளமான மூக்கு
அதன் கருப்பு நிற இறகு
அத கா கா கரைவது வெகு அழகு (2 )

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
குருவி வந்தது (2)
அதன் குட்டையான மூக்கு
அதன் வட்டமான கண்ணு
அது கீச் கீச் கத்துவது வெகு அழகு (2 )

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
கிளி வந்தது (2)
அதன் வளைந்த சிவப்பு மூக்கு
அதன் பச்சை நிற இறகு
அது அக்கா அக்கா பேசுவது வெகு அழகு (2 )

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
மயில் வந்தது (2)
அதன் நீளமான கழுத்து
அதன் வண்ண வண்ணத் தோகை
அது நடனம் ஆடுவது வெகு அழகு (2 )

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
வாத்து வந்தது (2)
குள்ள வாத்து வந்தது
அதன் தட்டையான மூக்கு
அதன் குட்டையான கால்கள்
அது குவாக் குவாக் கத்துவது வெகு அழகு (2 )



# ஆயத்தப்படுத்துதல்-1

எண்ணும் எழுத்தும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ரோசாப்பூ செண்டு

ரெண்டும் ரெண்டும் நாலு
நாய்க்குட்டி வாலு

மூன்றும் மூன்றும் ஆறு
தட்டு நிறைய சோறு

நாலும் நாலும் எட்டு
நல்லாப் பறக்கும் சிட்டு

அஞ்சும் அஞ்சும் பத்து
அறிவே நம்ம சொத்து



Karka Kasadara

# தட்டில் எத்தனை லட்டு?

எண்ணும் எழுத்தும்

தட்டு நிறைய லட்டு
மொத்தம் எத்தனை லட்டு?
தட்டில் ஐந்து லட்டு





அகிலா தின்றாள் ஒன்று
இப்போ எத்தனை லட்டு?
தட்டில் நான்கு லட்டு



முகிலன் தின்றான் ஒன்று
இப்போ எத்தனை லட்டு?
தட்டில் மூன்று லட்டு



பாட்டி தின்றார் ஒன்று
இப்போ எத்தனை லட்டு?
தட்டில் இரண்டு லட்டு



அம்மா தின்றார் ஒன்று
இப்போ எத்தனை லட்டு?
தட்டில் ஒரு லட்டு



அப்பா தின்றார் ஒன்று
இப்போ எத்தனை லட்டு?
தட்டில் இல்லை லட்டு

# பாட்டு பாடவா!

எண்ணும் எழுத்தும்








தும்பி ஒன்று பறந்ததாம்
பன்றி மூக்கில் அமர்ந்ததாம்
பன்றி தும்மல் போட்டதும்
தும்பி உயரே பறந்ததாம்
பருந்து அதைப் பார்த்ததும்
விழுந்து விழுந்து சிரித்ததாம்.

மயில் அண்ணன் வந்தாராம்
மிளகாய்ப் பழம் தின்றாராம்
இளநீர் குடித்து மகிழ்ந்தாராம்
இனிதே ஆட்டம் போட்டாராம்



# படம் பார்த்து கதை கூறுக.

எண்ணும் எழுத்தும்



# ஆயத்தப்படுத்துதல்-1

மேகம் பார்! மேகம் பார்!

மேலே மிதக்குது!

காகம் பார்! காகம் பார்!-அதன்

கீழே பறக்குது!

கிளியைப் பார்! கிளியைப் பார்!

மர உச்சியில் இருக்குது!

வேரைப் பார்! வேரைப் பார்! - மரத்தின்

அடியில் இருக்குது!

முட்டை பார்! முட்டை பார்!

கூட்டின் உள்ளே இருக்குது!

குருவி பார்! குருவி பார்! -கூட்டின்

வெளியே நிற்குது!